මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PE/2024/33** **2024.10.20**

# பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14

## அரசியல் வானலை பிரச்சாரங்களுக்கு தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு வசதிகளை வழங்குதல்

1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின்படி பெயர் குறித்த நியமனப்பத்திரமொன்றைக் கையளித்த ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அரசியல் ஒலிபரப்பு வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

இந்த ஒலிபரப்பு காலங்களை ஒதுக்குவதற்கான திருவுளச் சீட்டிழுப்பை 2024.10.22 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு மாவட்ட செயலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள பிரதான கேட்போர்கூடத்தில் மேற்கொள்வதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடனும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடனும் இணைந்து தேர்தல் ஆணைக்குழு செயலாற்றும்.

2024 பாராளுமன்றத் தேர்தலுக்காக செல்லுபடியான பெயர் குறித்த நியமனப்பத்திரங்களைக் கையளித்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் (அல்லது எழுத்திலான அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களும்) அத்துடன் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களும் (அல்லது எழுத்திலான அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களும்) மாத்திரம் இதில் கலந்து கொள்ள முடியும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்